# ரமழானின் தூது

இச்சிறு நூல் புனித ரமழானில் பொதிந்துள்ள பல்வேறு தாத்பரியங்களுள் ஒன்பது தாத்பரியங்கள் சம்பந்தமானதாகும்.

[i] شَهْرُ رَمَضَانَ الَّذِي أُنزِلَ فِيهِ الْقُرْآنُ هُدًى لِّلنَّاسِ وَبَيِّنَاتٍ مِّنَ الْهُدَىٰ وَالْفُرْقَانِ

**முதலாவது அம்சம்**

ரமழான் நோன்பானது இஸ்லாத்தின் முதன்மையான ஐந்து தூண்களுள் ஒன்றாகும். மேலும், அது உயர் அந்தஸ்தைக் கொண்ட ஒரு வணக்க வழிபாடுமாகும்.

ஆக, புனித ரமழான் மாத நோன்பில் பல ஞானங்களும் நோக்கங்களும் பொதிந்துள்ளன. வல்லோன் அல்லாஹ்வின் அனைத்தையும் வியாபித்த இறை பரிபாலிப்பு, மனிதனின் சமூக வாழ்வு மற்றும் தனி மனித வாழ்வு, அவனது உளப்பயிற்றுவிப்பு என்பவற்றுடன் இறை அருட் கொடைகளுக்காக நன்றி செலுத்துதல் என்பன அவற்றுள் சிலவாகும்.

நோன்பிலிருக்கும் இறை பரிபாலிப்பு சம்பந்தமான தாத்பரியங்களுள் ஒன்றைப் பின்வருமாறு நோக்கலாம்: வல்லோன் அல்லாஹ், பூமிப் பரப்பை ஒரு ஆகார விரிப்பாகப் படைத்து அத்தனை வகையான அருள் ஆகாரங்களையும் [ii] مِنْ حَيْثُ لَا يَحْتَسِبُ "நினையாப் புறத்திலிருந்து" என்ற வசனத்திற்கேற்ப அந்த விரிப்பில் பரப்பி வைத்து, அதனூடாகத் தனது பரிபாலிப்பின் பரிபூரணத் தன்மையையும், இறை கருணை, இறை அன்பு என்பவற்றையும் வெளிப்படுத்துகின்றான். மனிதன் அலட்சியப் போக்கு என்ற திரைக்குப் பின்னால், காரணகாரிய எல்லைக்குள் இருந்து கொண்டு, பிரகாசித்துக் கொண்டிருக்கும் மேற்படி உண்மைகளைக் கண்டு கொள்ள முடியாதவனாக இருக்கின்றான், சிலவேளை அவற்றை மறந்தும் விடுகின்றான். புனித ரமழானில் இறை நம்பிக்கையாளர்கள் உடனடியாக நன்கு பயிற்றுவிக்கப்பட்ட ஓர் இராணுவம் என்ற நிலையை அடைந்து, நித்திய அரசனின் விருந்துபசாரத்திற்காக அழைப்பு விடுக்கப்பட்டவர்களை ஒத்ததொரு நிலையில் மாலை வரை அவனது கட்டளைக்காகக் காத்திருந்து, தமது அடிமைத்துவத்தைப் பறைசாற்றுகின்றனர். இதனூடாக அந்தப் பரிவும், பரிபூரணத்துவமும் கொண்ட மாபெரும் இறை கருணைக்கு முன்னால் மிகவும் ஆழமும், மேன்மையும் நேர்த்தியும் மிக்கதோர் வணக்கத்தின் மூலம் பதிலளிக்கின்றனர். இத்தகையதொரு சிரேஷ்டமான வணக்கத்திலும், அதி விசேட கௌரவிப்பிலும் பங்கு பற்றாத மனிதர்கள் மனிதன் என்ற நாமத்திற்கு அருகதையுள்ளவர்கள் தானா?

**இரண்டாவது அம்சம்**

அருள் நிறைந்த ரமழான் நோன்பிலிருக்கும், இறை அருட்கொடைகளுக்காக நன்றி செலுத்துவது தொடர்பான ஞானம் பொதியப்பெற்ற பல்வேறு அம்சங்களுள் ஒன்றைப் பின்வரும் கோணத்தில் அவதானிப்போம்: ரிஸாலே-இ நூர் தொகுப்பின் முதலாம் வார்த்தையில் குறிப்பிடப்பட்டதைப் போன்று, ஓர் அரச சமையலறையிலிருந்து ஒரு சேவகனால் கொண்டு வரப்படும் அறுசுவை உணவுகளுக்கான ஒரு விலை இருக்கின்றது. வெறுமனே சேவகனுக்கு சிறு அன்பளிப்பு ஒன்றைக் கொடுத்து விட்டு, மிகப் பெறுமதி வாய்ந்த அந்த அருள் ஆகாரங்களைப் பெறுமதியற்றதாகக் கருதி அவற்றை அருள்பாலித்த அரசனை அறிந்து கொள்ளாதிருப்பது மிகப் பெரியதொரு மடமையாகும். வல்லோன் அல்லாஹ் மனித குலத்துக்காக எண்ணற்ற வகை வகையான அருட்கொடைகளை பூமிப் பரப்பெங்கும் பரப்பி வைத்துள்ளான். இவற்றுக்குப் பகரமாக அந்த அருட்கொடைகளுக்கான விலையாக மனிதன் நன்றி செலுத்துபவனாக இருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கின்றான். அந்த அருட்கொடைகளுக்கு, கண்களுக்குப் புலனாகின்ற காரணகர்த்தாக்களும் உரித்தாளர்களும் சேவகன் என்ற தரத்திலேயே இருக்கின்றனர். அந்தச் சேவகர்களுக்கு ஒரு விலை கொடுக்கின்றோம்; அவர்களுக்கு நன்றிக்கடன் பட்டவர்களாக ஆகின்றோம். அனைத்துக்கும் மேலால் தகுதிக்கு விஞ்சிய அளவு அதிகமான பெருமதிப்பும் நன்றியும் செலுத்துகின்றோம். ஆனால், உண்மையான அருள்பாலிப்பவன், மேற்படி அருட்கொடைகள் காரணமாக அந்தக் காரணகர்த்தாக்களை விட எண்ணற்ற மடங்கு நன்றி செலுத்தப்பட அருகதையுள்ளவனாக

---

[i] பகரா, 185

[ii] அத்தலாக், 03

இருக்கின்றான். ஆம்! உண்மையான நன்றிக்கான முதன்மையான அடிப்படைகள் எவையெனில், எந்தவிதத் திரையும் இன்றி நேரடியாக அந்த அருட்கொடைகளை அருள்பாலிக்கின்ற உண்மையான அருள்பாலிப்பாளனை அறிந்துகொள்வதும், அவ் அருட்கொடைகளின் பெறுமதியை அறிந்து அவற்றின்பால் தனக்குள்ள தேவையை உணர்ந்து கொள்வதுமாகும்.

ஆகவே, புனித ரமழான் நோன்பானது உண்மையானதும், தூய்மையானதும், உயர் தரமுடையதுமான ஒரு பரிபூரணத்துவமிக்க நன்றி செலுத்தலுக்கான திறவுகோலாகும். ஏனெனில், பிற காலங்களில் பசித்திருக்க வேண்டிய கடமைப்பாட்டில் இல்லாத மனிதர்களுள் அதிகமானவர்கள், பசியின் அகோரத்தை நேரடியாக அனுபவிக்காதிருப்பதால், அதிகமான அருட்கொடைகளின் பெறுமதியைப் புரிந்துகொள்ள முடியாதவர்களாக உள்ளனர். காய்ந்த ஒரு ரொட்டித் துண்டிலிருக்கும் அருட் பெறுமானம், வயிறு நிறைந்த நிலையிலுள்ள மனிதர்களால், குறிப்பாகப் பணம் படைத்தவர்களால் புரிந்து கொள்ளப்படுவதில்லை. ஆனால், நோன்பு துறக்கும் நேரம், அந்தக் காய்ந்த ரொட்டித் துண்டானது, ஓர் இறையடியானின் பார்வையில் மிகப் பெரியதொரு இறை அருள் என்பதற்கு அவனது சுவையுணர்வு சாட்சி பகரும். புனித ரமழானில் மாமன்னர் முதல் பரம ஏழைகள் வரை அனைவரும் அந்த அருட்கொடைகளின் பெறுமதியைப் புரிந்து கொள்வதன் மூலமாக நன்றி செலுத்துவதற்கான ஆன்மீகபூர்வமான அந்தஸ்த்தை அடைந்து கொள்கின்றனர். மேலும், பகற் பொழுதுகளில் உண்பதை விட்டும் தடுக்கப்பட்டுள்ள காரணத்தினால், “அந்த அருட்கொடைகள் எனது சொத்துக்கள் அல்ல; இவற்றை அனுபவிப்பதற்கு எனக்கு எந்தவித உரிமையும் கிடையாது; இவற்றின் உண்மை உரித்தாளன் வேறொருவனாக இருக்கின்றான்; அவனது கட்டளைக்காகக் காத்திருக்கின்றேன்.” என்று அந்த அருட்கொடைகளை அருளாகப் பார்க்கக் கற்றுக்கொள்வான்; அவற்றுக்காக நன்றி செலுத்துவான். ஆம்! இந்தவகையில் நோன்பானது, பல கோணங்களில், மனிதன் மீதுள்ள அடிப்படைக் கடமையான நன்றி செலுத்தலுக்கான திறவுகோல் என்ற நிலையை அடைகின்றது.

**மூன்றாவது அம்சம்**

நோன்பின் பிரதிபலனாக, மனிதனது சமூக வாழ்வை நோக்கியிருக்கும் ஞானத்தோடு சம்பந்தப்பட்ட பல்வேறு நிகழ்வுகளுள் ஒன்று பின்வருமாறு: வாழ்வாதாரங்களைப் பொருத்த மட்டில் மனிதன் பல்வேறு தராதரங்களில் படைக்கப்பட்டுள்ளான். இந்த முரண் நிலையைத் தீர்ப்பதற்காக வல்லோன் அல்லாஹ் ஏழைகளுக்கு உதவுவதற்காகப் பணம் படைத்தவர்களை நோக்கி அழைப்பு விடுக்கிறான். நோன்பில் பசித்திருப்பதன் மூலமாக பணம் படைத்தவர்கள், வறியவர்களின் கவலைக்கிடமான நாளாந்த நிலைமைகளையும், பசியின் கொடுமையையும் உணர்ந்துகொள்ள முடியும். ஒருவேளை, நோன்பு இல்லை என்றிருப்பின், மனோ இச்சையை நேசிக்கும் அதிகமான பணம் படைத்தவர்கள், பசியும் வறுமையும் எவ்வளவு கஷ்டகரமானது என்பதையும், உண்ண வசதியற்ற ஏழைகள் எந்த அளவு ஆதரவளிக்கப்பட வேண்டியவர்களாக இருக்கின்றார்கள் என்பதையும் உணர்ந்து கொள்ள வாய்ப்பற்றவர்களாக ஆகியிருப்பார்கள். இந்தக் கோணத்தில் மனிதனிடமுள்ள, சக மனிதர்களுக்கு இரக்கம் காட்டும் பண்பானது உண்மை நன்றிக்கான ஓர் அடிப்படையாகும். எந்த ஒரு மனிதனை எடுத்துக் கொண்டாலும், தன்னை விட ஏதோ ஒரு வகையில் வறிய நிலையில் உள்ள ஒருவனைக் கண்டு கொள்ளலாம். எனவே, அவன் இந்த மனிதனுக்கு இரக்கம் காட்டக் கடமைப்பட்டுள்ளான். தனது நஃப்ஸை பசியில் போடுவது நோன்பின் மூலம் கடமையாக்கப் பட்டிராவிடில், தன் மீது கடமையாக்கப்பட்ட அந்த உதவியை இரக்க உணர்வுடனும், ஆன்ம திருப்தியுடனும் மனிதன் செய்ய முடிந்திராது; செய்தாலும் அது பூரணத்துவமுடையதாக இருந்திராது. ஏனெனில், அந்தக் கஷ்டத்தை யதார்த்தபூர்வமாக மனித நஃப்ஸ் தன்னில் உணர்ந்து கொள்ளவில்லை.

**நான்காவது அம்சம்**

மனித நஃப்ஸின் பயிற்றுவிப்போடு சம்பந்தப்பட்ட பல்வேறு ஞானங்கள் புனித ரமழான் மாத நோன்பில் காணப்படுகின்றன. அந்த ஞானங்கள் பொதியப்பெற்ற பல்வேறு அம்சங்களுள் ஒன்றை பின்வரும் கோணத்தில் பார்க்கலாம்: நஃப்ஸானது, எப்போதும் சுதந்திரமாகவும் தன்னிச்சையாகவும் இருக்கவே விரும்பும். மேலும், தன்னை அவ்வாறே கருதிக் கொள்ளும். அத்தோடு ஆழ் மனதில் இயல்பாகவே மாயையான ஓர் அதிகாரத்தையும், சுயாதீனத் தன்மையையும் உணரும்; தான் எண்ணற்ற அருட்கொடைகளால் பரிபாலிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றேன் என்பதை அது சிந்திக்க விரும்புவதில்லை, குறிப்பாக உலகின் செல்வங்களும் ஆட்சி அதிகாரங்களும் வாய்க்கப் பெற்று அலட்சியப் போக்கும் அவற்றோடு இணைந்து கொண்டால், பிறர் நலன் பாராது வெறிபிடித்த மிருகத்தைப் போல் இறை அருட்கொடைகளை அது தனக்கு மட்டுமாகக் கவ்விக் கொள்ளும்.

ஆம்! புனித ரமழானில் கோடீஸ்வரன் முதல் மிகவும் வறியவன் வரை அனைவரது ந..்ப்ஸும், தான் ஆட்சியதிகாரம் கொண்டவன் அல்ல சேவகன் ஆவேன்; சுதந்திரவான் அல்ல அடிமை ஆவேன் என்பதை அறிந்து கொள்ளும். அனுமதி தரப்படவில்லை எனில், அற்பமான மிகவும் இலகுவானதொரு காரியத்தைக் கூட நிறைவேற்ற முடியாது. ஏன் ஒரு மிடறு தண்ணீர் கூட அருந்த முடியாது என்பதை உணர்ந்து கொள்வதன் மூலமாக, ந..்ப்ஸ் தனக்குள் மாயையாக உருவாக்கிக் கொண்ட ருபூபிய்யத் –அதாவது தானே ரப் என்ற போக்கு- சுக்குநூறாக்கப்பட்டு விடுவதால் உபூதிய்யத் என்ற இறை அடிமைத்துவத்தை நோக்கி அது மீளும்; தனது மகத்துவமிக்க கடமையான நன்றி செலுத்தலை நோக்கி உந்தப்படும்.

**ஐந்தாவது அம்சம்**

புனித ரமழான் மாத நோன்பிலிருக்கும் ந..்ப்ஸின் வக்கிர குணங்களைப் பண்படுத்தி அதைக் கட்டுக்கடங்காத போக்கிலிருந்து விடுவிப்பது சம்பந்தமான ஞானத்தோடு தொடர்புபட்ட பல்வேறு அமசங்களுள் ஒன்றைப் பின்வருமாறு நோக்குவோம்: மனித ந..்ப்ஸானது அலட்சியப்போக்கின் காரணமாகத் தன்னைத் தானே மறந்து விடுகின்றது. தனது இயல்பிலேயே குடி கொண்டிருக்கும் எல்லையற்ற இயலாமை, முடிவற்ற தேவைகள் மற்றும் குறைபாடுகளை அது கண்டு கொள்ளாது; கண்டு கொள்ள விரும்பவும் மாட்டாது. மேலும், தனது பலவீனத்தையும், அழிவுகளுக்கும் அனர்த்தங்களுக்கும் முன்னால் தனது சரணாகதி நிலையையும், விரைவாகச் சிதைந்து அழுகிப் போகக் கூடிய வெறும் சதையாலும் எலும்பாலும் தான் ஆக்கப்பட்டிருப்பதையும் ஒருபோதும் அது சிந்திக்காது. தான் ஏதோ உருக்கால் ஆன உடம்புக்குச் சொந்தக்காரன் போலவும், இறவா வரம் பெற்று நிரந்தரமாக இந்த உலகிலேயே தங்கி இருக்கப்போவது போலவும் ஒரு வகை மாயையில் உலகைப் பற்றிக் கொள்ளும். பேராசையுடன் எதிலும் திருப்தியடையாது ஆன்மாவைப் பறி கொடுத்த நிலையில் உலகத்திற்காகவென்றே தன்னை இழந்து விடும். அற்ப இன்பங்களுக்காகவும் இலாபங்களுக்காகவும் எதனுடனும் தன்னைப் பிணைத்துக் கொள்ளும். அதேநேரம், அனைத்துக்கும் மேலால் மாபெரும் கருணையுடன் தன்னைப் போஷித்துப் பரிபாலிக்கும் படைப்பாளனை மறந்தும் விடும்.

இவ்வாறு ந..்ப்ஸானது படு பாதகங்களில் உழன்று கொண்டிருக்கும் போது..

நோன்பானது அதி அலட்சியப் போக்குடையவர்கள், வம்புக்காரர்களுக்கும் கூட தமது பலவீனம், இயலாமை மற்றும் இறை ஆதரவின்பால் தமக்குள்ள தேவை என்பவற்றை உணர்த்தும். மனிதன் பசி காரணமாக வயிற்றைப் பற்றி சிந்திப்பான். அதனூடாக எவ்வளவு தேவைப்பாடு உடையவனாக இருக்கின்றேன் என்பதைப் புரிந்து கொள்வான்; தனது உடலின் பலவீனத்திற்கு மேல் பலவீனமான நிலையை ஒரு கணம் சிந்தித்துப் பார்ப்பான்; இறை கிருபையின் பால் தனக்குள்ள தேவையை உணர்ந்து கொள்வான். ஆகவே, ந..்ப்ஸின் பிர்அவ்னியத்தான போக்கை விட்டு விட்டு தனது எல்லையில்லா இயலாமை மற்றும் பலவீனத்தை உணர்ந்தவனாக அல்லாஹ்விடம் தஞ்சமடைந்து கொள்வதற்கான தேவையை உணர்ந்து கொள்வான். மேலும், ஆழமானதோர் ஆன்ம நன்றி ஊடாக இறை கருணையுடைய கருவூலங்களின் கதவைத் தட்ட ஆயத்தமாவான். (பொடுபோக்குத் தன்மை அவனது ஆன்மாவை இன்னும் மரணிக்கச் செய்யவில்லை என்றபட்சத்தில் இவை சாத்தியமாகும்).

**ஆறாவது அம்சம்**

ரமழான் நோன்பில், புனித அல்குர்ஆன் இறக்கியருளப்பட்டமை மற்றும் ரமழான் மாதம் புனித அல்குர்ஆன் இறக்கியருளப்படுவதற்கான மிகச் சிறந்த காலம் என்ற ரீதியில் பொதிந்திருக்கும் ஞானங்களின் பல்வேறு வெளிப்பாடுகளுள் ஒன்றை நோக்கிக் கவனத்தைச் செலுத்துவோம்: சர்வ ஞானம் பொருந்திய அல்குர்ஆன் புனித ரமழானில் இறக்கியருளப்பட்டது என்பது சந்தேகமற்றது. ஆகவே, புனித அல்குர்ஆன் இறக்கியருளப்பட்ட அந்தக் காலத்திற்காக ஒருவன் தன்னை தயார் செய்து, அர்ஷிலிருந்து வரும் அந்தத் தெளிவுரைகளை அழகிய முறையில் வரவேற்பதற்காக ரமழான் மாதத்தில் ந..்ப்ஸுடைய இச்சைகளிலிருந்து விடுபட்டு, வீண் விளையாட்டுக்களிலிருந்து தவிர்ந்து, உணவு, பானம் போன்றவற்றைத் துறந்து ஒரு வகை மலகானிய்யத் நிலையை அடைகின்றான். இதன் மூலமாக அந்த மாதத்தில் அல்குர்ஆனை அன்றைய தினம் இறக்கியருளப்படுவது போன்று ஓதி, அதிலுள்ள அல்லாஹ்வின் வார்த்தைகளை ரஸூலே அக்ரம் அலைஹிஸ்ஸலாது வஸ்ஸலாம் அவர்களிடமிருந்து நேரடியாகச் செவிமடுக்கும் உணர்வில், அல்லது ஜிப்ரீல் (அலை) அவர்களிடமிருந்து அல்லது அந்த வார்த்தைகளின் சொந்தக்காரனான நித்திய அரசன் அல்லாஹ்விடமிருந்து நேரடியாகவே செவிமடுக்கும் உணர்வில் செவிமடுப்பதன்

மூலம் புனிதமானதோர் அந்தஸ்த்தை அடைந்து கொள்ள முடியுமாக உள்ளது. இது இந்த மாதத்தில் குர்ஆன் இறக்கியருளப்பட்டதிலுள்ள ஞானத்தை ஓரளவு எடுத்துக் காட்டுகின்றது.

ஆம்! புனித ரமழான் மாதத்தில் ஒட்டுமொத்த இஸ்லாமிய உலகும் ஒரு வணக்கஸ்தலமாக மாறி விடுகின்றது. அந்த வணக்கஸ்தலம் எப்படிப்பட்டதெனில், மில்லியன் கணக்கான ஹா∴பிஸ்கள் அதன் ஒவ்வொரு மூலையிலும் இருந்து கொண்டு, அர்ஷிலிருந்து வரும் வழிகாட்டியான அந்தக் குர்ஆனை பூமியிலுள்ளவர்களுக்கு எத்தி வைக்கின்றனர். இவ்வாறு ஒவ்வொரு ரமழானும் شَهْرُ رَمَضَانَ الَّذِي أُنزِلَ فِيهِ الْقُرْآنُ என்ற வசனத்தின் தாத்பரியத்தைப் பிரகாசமாக வெளிப்படுத்திக் கொண்டிருக்கின்றது. அத்தோடு, அது அல்குர்ஆனுடைய மாதம் என்பதை நிரூபித்துக் கொண்டுமிருக்கின்றது. அந்த விசாலமான வணக்கஸ்தலத்தில் வீற்றிருக்கும் ஜமாஅத்தின் ஏனைய அங்கத்தவர்களில் சிலர் இறை காதலுடன் அந்த வார்த்தைகளைச் செவி மடுப்பார்கள். இன்னும் சிலரோ தாமாக ஓதிக் கொள்வார்கள். இப்படிப்பட்ட ஆன்மீக மயமான புனித வணக்கஸ்தலத்தில் இருந்து கொண்டு ந∴ப்ஸின் இச்சைகளுக்கு அடிமையாகி, உண்டு குடித்து அந்த ஆன்மீகச் சூழலிலிருந்து வெளியேறுவதானது தன்னளவில் வெறுக்கத்தக்கது மாத்திரமன்றி அந்த ஜமாஅத்தின் ஆன்மீக ரீதியான வெறுப்பையும் சம்பாதித்துக் கொள்ள வழிவகுக்கும். அவ்வாறே, புனித ரமழானில் நோன்பாளிகளைத் தூற்றிக் குரோதம் வளர்ப்பவர்கள் முழு முஸ்லிம் உம்மத்தினதும் ஆன்ம வெறுப்பைச் சம்பாதித்துக் கொள்வார்கள்.

**ஏழாவது அம்சம்**

மனிதன், உலகிற்கு மறுமைக்கான வியாபாரத்திற்காகவும் பயிர்ச் செய்கைக்காகவும் அனுப்பப்பட்டவன் என்ற வகையில், ரமழான் நோன்பிலிருக்கும் மனித குலத்திற்கான வெகுமதிகள் சம்பந்தமான பல்வேறு தாத்பரியங்களுள் ஒன்றைப் பின்வருமாறு நோக்குவோம்:

புனித ரமழானில் நல்லமல்களுக்கான கூலி ஒன்றுக்கு ஆயிரமாகும். ஹதீஸ்களில் குறிப்பிடப்பட்டுள்ளதைப் போன்று அல்குர்ஆனின் ஒவ்வோர் எழுத்துக்கும் பத்து நன்மைகள் பதியப்படும். அதாவது, பத்து அழகிய செயல்களாக மாறும்; பத்து சுவனத்துக் கனிகளைப் பெற்றுத்தரும். புனித ரமழானைப் பொருத்தவரை ஒவ்வோர் எழுததுக்கும் பத்தல்ல ஆயிரம் நன்மைகள், ஆயதுல் குர்ஸி போன்ற வசனங்களின் ஒவ்வோர் எழுத்துக்கும் பல்லாயிரக்கணக்கான நன்மைகள், விசேடமாக ரமழானுடைய ஜும்ஆ தினங்களில் அதைவிட அதிகமான நன்மைகள் பதியப்படுகின்றன. மேலும், லைலதுல் கத்ர் தினத்தில் அந்த நன்மைகள் முப்பதாயிரமாக மாறி விடுகின்றன. ஆம்! ஒவ்வோர் எழுத்திற்கும் முப்பதாயிரம் நித்திய கனிகளை இறை அடியார்களுக்குப் பெற்றுத்தரும் புனித அல்குர்ஆன், புனித ரமழானில் தூபா மரத்தை ஒத்ததொரு நிலையை அடைந்து மில்லியன் கணக்கான நித்திய கனிகளை இறை அடியார்களுக்குப் பெற்றுக் கொடுக்கும். இதோ இந்த நஷ்டமே இல்லாத இலாபம் கொழிக்கும் புனிதமான, நித்தியமான வியாபாரத்தைத் தவறவிட்டு விடாதீர்கள். மேலும், இந்த வியாபாரத்தின் பெறுமதியைப் பொருட்படுத்தாது புறக்கணிப்பவர்கள் எப்படிப்பட்ட கணக்கிட முடியாத ஒரு நஷ்டத்தில் இருக்கின்றார்கள் என்பதையும் அறிந்து கொள்ளுங்கள்.

ஆம்! புனித ரமழானானது மறுமை வியாபாரத்திற்கான மிகவும் இலாபகரமானதொரு சந்தையாகும்; நிரந்தர விளைச்சல்களைப் பெற்றுத்தரக்கூடிய செழிப்பு மிக்கதொரு விளைச்சல் நிலமாகும்; அமல்கள் பல்கிப்பெருகிப் பல மடங்குகளாக மாறும் ஓர் ஆன்மீக வசந்த காலமாகும். மேலும், இறை பரிபாலிப்புக்கும் ஆட்சியதிகாரத்திற்கும் முன்னால் மனிதனின் அடிமைத்துவத்தை பறைசாற்றுவதற்கான மிகப் புனிதமானதொரு பண்டிகைக் காலமாகும். இதன் காரணமாகத் தான் உண்டு குடிப்பதன் மூலமாக ந∴ப்ஸானது பொடுபோக்குத்தனத்திலும் மிருகத்தனமான இச்சைகளுக்கு அடிமைப்பட்டு வீண் விளையாட்டுக்களிலும் உலக இன்பங்களிலும் மூழ்கி விடாதிருக்க இம்மாதத்தில் நோன்பு கடமையாக்கப் பட்டிருக்கின்றது. குறித்த ஒரு காலத்திற்கு மிருகத்தனமான இச்சைகளிலிருந்து விடுபட்டு மலக்கானியத் நிலையை அடைந்து மறுமை வியாபாரத்திற்காக மனிதன் தன்னை ஒட்டு மொத்தமாக அர்ப்பணித்துக் கொள்கிறான். லௌகீகத் தேவைகளை விட்டும் தற்காலிகமாக ஒதுங்கி ஒரு சுவனத்து ரூஹ் உடலுறுப் பெற்றது போன்றதொரு நிலைக்கு மாறி விடுகின்றான். இவ்வாறு, மனிதன் நோன்பினூடாகத் தனது இரட்சகன் பால் தனக்குள்ள தேவையை ஒருவகையில் பிரதிபலிக்கின்றான்.

ஆம்! புனித ரமழானானது, இந்தத் தற்காலிகமான உலகில், குறுகிய ஓர் ஆயுளுக்கும் தற்காலிகமான ஒரு வாழ்விற்கும் பகரமாக நித்தியமானதும் முடிவற்றதுமான ஓர் ஆயுளை, வாழ்க்கையை வெற்றியீட்டித்தருகின்றது. ஆம்! தனி ஒரு ரமழான் என்பது வருட ஆயுளுக்குச் சமனான நித்திய கனிகளைப் பெற்றுத் தருகின்றது. லைலதுல் கத்ர் குர்ஆன் இறங்கிய காரணத்தினால் ஆயிரம் மாதங்களை விட சிறப்புப் பெற்றமை இதற்கான சான்றாகும். மாமன்னர்கள் தமது ஆட்சிக் காலத்தில் ஒவ்வொரு வருடமும் தனது ஆட்சியதிகாரத்துக்கும் கண்ணியத்துக்கும் பெருமை சேர்க்கும் வகையில் குறித்த சில விசேட தினங்களை விழாக்காலமாக அறிவிப்பார்கள். அன்றைய தினம் வழமையான நடைமுறைகள், சட்டதிட்டங்களுக்கு மாறாக, தனக்கு விசுவாசமான அந்த மக்களுக்கு முன்னால் ஆஜராகி, மக்கள் மீதான தமது விசேட அன்பை வெளிப்படுத்தி, அவர்களை பலவிதமான அன்பளிப்புக்கள், சலுகைகளினூடாக மகிழ்வூட்டி, இதன்மூலமாக ஒட்டு மொத்த மக்களும் தன்பால் நெருக்கமாகி தம் மீதுள்ள விசுவாசத்தை அதிகரிக்க வேண்டும் என விரும்புவார்கள். இதுபோன்றுதான், ஆதி அந்தமில்லாதவனும் பதினெட்டாயிரம் உலகங்களின் சக்கரவர்த்தியுமான சர்வ வல்லோன், அந்த அனைத்து உலகங்களையும் விளித்துப் பேசும் சர்வ ஞானம் பொருந்திய அல்குர்ஆனை புனித ரமழானில் இறக்கி அருளினான். நிச்சயமாக இப்படிப்பட்ட ரமழான் மாதமானது அதி விசேடமானதொரு திருநாள் காலமாகவும் ஆன்மீகக் களிப்பு நிரம்பிய ஓர் ஒன்றுகூடலாகவும் இருக்க வேண்டும் என்பது இறை ஞானத்தின் ஒரு வெளிப்பாடாகும். ஆக, இப்படிப்பட்ட ரமழான் மாதத்தில் மனிதர்கள் இன்ன பிற இச்சைகளின் பின்னாலும் வீண் விளையாட்டுக்களின் பின்னாலும் சென்று விடாதிருப்பதற்காக நோன்பு கடமையாக்கப்பட்டுள்ளது. மேலும், அப்படிப்பட்ட நோன்புகளுள் மிகச் சிறப்பானது, வயிற்றைப் போன்றே அனைத்து ஆசாபாசங்களையும், கண், காது, உள்ளம், கற்பனா சக்தி போன்ற அத்தனை அங்க அவயங்களையும் நோன்பிருக்கச் செய்வதாகும். அதாவது, தடுக்கப்பட்டவற்றை விட்டும், வீண் விளையாட்டுக்களை விட்டும் இவற்றைத் திசை திருப்பி ஒவ்வொன்றையும் அவற்றுக்கென்றே உள்ள வணக்க வழிபாடுகளை நோக்கி நகர்த்த வேண்டும். உதாரணமாக, நாவை பொய், புறம், மோசமான வார்த்தைகள் என்பவற்றிலிருந்து தடுத்துக்கொண்டு, அந்த நாவை குர்ஆன் திலாவத், திக்ர், ஸலவாத், பாவமன்னிப்பு போன்றவற்றில் ஈடுபடுத்துவது நாவை நோன்பு நோற்க வைப்பதாகும். கண்களை ஹராமானவற்றைப் பார்ப்பதை விட்டும் தடுத்து அல்லாஹ்வின் அற்புதப் படைப்பினங்களைப் பார்த்துப் படிப்பினை பெறுவதற்காகவும், காதுகளை மோசமானவற்றைக் கேட்பதை விட்டும் தடுத்து, நல்ல விடயங்களையும் குர்ஆனையும் செவிமடுத்துப் பயன் பெறுவதற்காகவும் பயன்படுத்துவதானது அந்த உறுப்புக்களை நோன்பு நோற்க வைப்பதாகும். மேலும், வயிறு மிகப் பெரியதொரு தொழிற்சாலையாக இருப்பதால் நோன்பு நோற்று அதனை வழிக்குக் கொண்டு வருவதன் மூலமாக ஏனைய சிறு அவயவங்களையும் இலகுவாகக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர முடியும்.

**எட்டாவது அம்சம்**

புனித ரமழானில் தனி மனித வாழ்வை நோக்கியிருக்கும் ஞானங்களோடு சம்பந்தப்பட்ட பல்வேறு வெளிப்பாடுகளுள் ஒன்றை இவ்விடத்தில் நோக்குவோம்: உடல், உள ரீதியான தடைகளை, கட்டுப்பாடுகளை ஏற்படுத்துவதானது ஆன்மீக ரீதியாகவும், மருத்துவ ரீதியாகவும் மனிதர்களுக்கான மிகப் பெரியதொரு நோய் நிவாரணியாகும். மனிதன் தனது ந.்.ப்ஸிற்கு அடிமைப்பட்டு உண்ணல், குடித்தல் விடயத்தில் மனம் போன போக்கில் செயற்படுவதானது தனிப்பட்ட பௌதீக வாழ்வுக்கு மருத்துவ ரீதியாகப் பாதகமானது மாத்திரமன்றி, கண்ணில் பட்டதையெல்லாம் ஹலால் ஹராம் பாராது உண்டு புடைப்பதானது எவ்வித சந்தேகமுமின்றி ஆன்மீக வாழ்வையும் நஞ்சூட்டும். அதன் பிறகு ஆன்மாவுக்கும் மனசாட்சிக்கும் செவிசாய்ப்பது அந்த ந.்.ப்ஸிற்கு மிகக் கடினமானதாக மாறும். கலகம் விளைவித்து கடிவாளத்தைத் தன் கையில் எடுத்துக் கொள்ளும். இந்த நிலையை அடைந்த பிறகு மனிதன் ந.்.ப்ஸின் மீது ஏற முடியாது, ந.்.ப்ஸ் மனிதன் மீது ஏறிக் கொள்ளும்.

இப்படிப்பட்ட ந.்.ப்ஸானது, புனித ரமழானில் நோன்பினூடாக, ஒரு வகையில் கட்டுப்படுவதற்கும் அடிபணிவதற்கும் பழகிக் கொள்ளும்; ஒருவகையான துறவறத்தைப் பொருந்திக் கொள்ளும்; சொல் பேச்சுக் கேட்பதற்குக் கற்றுக் கொள்ளும். சமிபாடடைவதற்கு முன் உணவிற்கு மேல் உணவைக் கொட்டி அப்பாவியான வயிற்றை நோயாளியாக்குவதை விட்டும் பாதுகாக்கும். மேலும், இறை கட்டளைக்குக் கட்டுப்பட்டு ஹலாலானவற்றைக் கூட புறந்தள்ளி விடுவதால், ஹராத்தை விட்டும் தவிர்ந்து கொள்வதற்கான ஷரீஅத்தினதும் மனசாட்சியினதும் கட்டளைகளுக்குச் செவிசாய்க்கும் திராணியை வளர்த்துக் கொள்ளும். இவ்வாறு, ஆன்மீக வாழ்வு அசிங்கப்படுவதை விட்டும் பாதுகாப்புப் பெறும்.

மேலும், மனிதர்கள் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் பசிக் கொடுமைக்கும் துன்பங்களுக்கும் ஆளாகின்றனர். ஆகவே, மனிதன் பொறுமை, சகிப்புத்தன்மை என்பவற்றோடு இவற்றுக்கான மிகப் பெரிய பயிற்றுவிப்பாக உள்ள பட்டினி, துறவறம் என்பவற்றின் மீதும் தேவை உடையவனாக இருக்கின்றான். புனித ரமழான் நோன்பானது ஏறக்குறைய பதினைந்து மணித்தியாலங்கள், ஸஹர் இல்லாதவிடத்து இருபத்து நான்கு மணித்தியாலங்கள் வரை நீளும் ஒரு பட்டினிக் கிடப்பு என்பதால் பொறுமைக்கும் சகிப்புத்தன்மைக்குமான பாரியதொரு பயிற்சியாக அமையும். இந்தவகையில், மனிதனின் துன்ப துயரங்களை இரட்டிப்பாக்கும் பொறுமையின்மைக்கும் சகிப்புத்தன்மையின்மைக்கும் நோன்பு ஒரு மருந்தாக உள்ளது.

அத்துடன், வயிறு எனும் தொழிற்சாலைக்காக வேலை செய்யும் பல பணியாளர்களும், அதனோடு தொடர்புபட்டு அதில் தங்கி வாழ்கின்ற பிற அங்க அவயவங்களும் மனிதனில் காணப்படுகின்றன. குறித்த ஒரு மாதம் பகற் பொழுதில் வயிற்றுக்கு ஓய்வு கொடுக்கப்படவில்லை எனில், ந.ஃப்ஸானது இந்த தொழிற்சாலைப் பணியாளர்களினதும், அதனோடு தொடர்புபட்ட அங்க அவயங்களினதும் தனிப்பட்ட வணக்க வழிபாடுகளை விட்டும் அவற்றை மறக்கடிக்கச் செய்துவிடும். தொடர்ந்தேர்ச்சையாக தனக்காக வேலை வாங்கி அடிபணியச் செய்துவிடும். மேலும், ஆன்மீக அவயவங்களான ஆன்மா, சிந்தனை, அறிவு போன்றவற்றைக் கூட அந்த தொழிற்சாலையிலிருந்து வெளிப்படும் இரைச்சல் மற்றும் புகை மூட்டம் காரணமாக அசௌகரியப்படுத்தும். இறுதியில், இந்தக் குழப்ப நிலையைப் பயன்படுத்தி ஒட்டு மொத்த அங்க அவயவங்களையும் தனக்காகத் தொழிற்படச் செய்வதில் கண்ணும் கருத்துமாக இருக்கும். இவ்வாறே அனைத்து அங்க அவயங்களும் தமகென்றே உள்ள மிகப் பெரிய கடமைகளை மறந்து விடும். இந்தக் காரணத்தினால் தான் ஆரம்ப காலம் தொட்டு இறை அடியார்கள் மற்றும் அவ்லியாக்கள் ஆன்மீக உயர்வை அடைந்து கொள்வதற்காக எளிமைக்கும், குறைவாக உண்டு குடிப்பதற்கும் தம்மைப் பழக்கப் படுத்திக் கொண்டார்கள்.

ரமழான் நோன்பினூடாக அந்தத் தொழிற்சாலைப் பணியாட்கள் வெறுமனே அந்தத் தொழிற்சாலைக்குப் பணி புரிவதற்காக மட்டும் தாம் படைக்கப்படவில்லை என்பதைப் புரிந்து கொள்கின்றனர். மேலும், அந்தத் தொழிற்சாலையைச் சார்ந்திருக்கும் பிற அவயவங்கள் அதனூடாக அனுபவிக்கும் அற்ப இன்பங்களுக்குப் பதிலாக, புனித ரமழானில் உன்னதமான ஆன்மீக இன்பங்களில் களிப்படைகின்றன. நேரத்தை அதற்காகச் செலவிடுகின்றன. இதனால் தான் போலும் ரமழானில் இறை அடியார்கள் தத்தமது படித்தரத்திற்கேற்ப விதவிதமான ஆன்மீக ரீதியான பிரகாசங்களையும், உணர்வுகளையும், இன்பங்களையும் அடைந்து கொள்கின்றனர். உள்ளம், ஆன்மா, அறிவு, சிந்தனா சக்தி, கற்பனை ஆற்றல் போன்ற போஷிக்கப்பட வேண்டிய ஆன்மீக அவயவங்கள் கூட பரக்கத் பொருந்திய இந்த மாதத்தில் அதிக பட்ச உயர்ச்சியையும் இன்பத்தையும் அடைந்து கொள்கின்றன. வயிறு அழுது புலம்பினாலும் கூட இந்த அவயவங்கள் மகிழ்ச்சி மேலீட்டால் தமக்கிடையே ஓரக் கண்ணால் புன்னகைத்துக் கொள்கின்றன.

**ஒன்பதாவது அம்சம்**

தனக்குள் மாயையாகத் தோற்றுவித்துக் கொண்டுள்ள ந.ஃப்ஸின் அதிகாரப் போக்கை உடைத்து, அதன் பலவீனத் தன்மையை வெளிக்காட்டி அடிமைத்துவத்தை ஞாபகமூட்டுவது தொடர்பாக புனித ரமழான் நோன்பில் பொதிந்திருக்கும் தாத்பரியங்களுள் ஒன்று பின்வருமாறு: ந.ஃப்ஸ் தனது இரட்சகனை தன்னை இரட்சித்துப் பரிபாலிப்பவனாக அறிந்து கொள்ள விரும்புவதில்லை. பிர்அவ்னைப் போன்று தன்னைத் தானே இரட்சகனாகக் கண்டு கொள்கின்றது. எப்படிப்பட்ட வேதனைகள், துன்ப துயரங்களைக் கொடுத்த போதிலும் அந்த நரம்பு அதனை விட்டகலாது. ஆனால், பட்டினி மூலமாக அந்த நரம்பு உடைத்தெறியப்பட முடியும். ஆம்! புனித ரமழான் மாத நோன்பானது நேரடியாக ந.ஃப்ஸுடைய பிர்அவ்னியத்தான அந்த நரம்பிற்குத் தாக்குதல் தொடுத்து அதனைச் சிதைத்து விடுகின்றது. தனது இயலாமை, பலவீனம் மற்றும் தேவைகளை நினைவூட்டி தான் அடிமை என்பதைத் தெரியப்படுத்துகின்றது.

ஒரு ஹதீஸில் வருவதாவது: சர்வ வல்லோன் அல்லாஹ் ந.ஃப்ஸிடம் ''நான் யார் என்பதையும், நீ யார் என்பதையும் கூறுவாயாக'' என்று வினவினான். பதிலுக்கு ந.ஃப்ஸ் ''நான் நானாகவும், நீ நீயாகவும் இருக்கின்றாய்'' என்று சொன்னது. பின்னர் ந.ஃப்ஸை நரகத்தில் ஆழ்த்தித் துன்புறுத்தி விட்டு மீண்டும் அதே கேள்வியைக் கேட்டான்; ''நான் யார்?, நீ யார்?''. ந.ஃப்ஸிடமிருந்து மீண்டும் அதே பதிலே வந்தது. ''நான் நானாவேன், நீ நீயாவாய்''. எப்படிப்பட்ட வேதனையைக் கொடுப்பினும் ந.ஃப்ஸ் தனது அகம்பாவத்தை விட்டுக் கொடுக்கவில்லை. இறுதியில் வல்லோன் அல்லாஹ்

பட்டினியால் வேதனைப்படுத்தி விட்டு அதே கேள்வியைக் கேட்டான்; “நான் யார்? நீ யார்?”. அப்போது ந.்.ப்ஸ் “நீ எனது ரப்பான ஆகாரமளிக்கும் கருணையாளனாவாய்; நானோ உனது வக்கற்ற ஓர் அடிமையாவேன்” என்று பதிலளித்தது.

اَللّٰهُمَّ صَلِّ وَسَلِّمْ عَلَى سَيِّدِنَا مُحَمَّدٍ صَلاَةً تَكُونُ لَكَ رِضَاءً وَ لِحَقِّهِ اَدَاءً بِعَدَدِ ثَوَابِ قِرَائَةِ
حُرُوفِ الْقُرْاٰنِ فِى شَهْرِ رَمَضَانَ وَ عَلَى اٰلِهِ وَ صَحْبِهِ وَ سَلِّمْ
سُبْحَانَ رَبِّكَ رَبِّ الْعِزَّةِ عَمَّا يَصِفُونَ * وَسَلاَمٌ عَلَى الْمُرْسَلِينَ * وَ الْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعَالَمِينَ
اٰمِين

---

**மண்ணிப்புக் கோரல்:**

இச்சிறு நூல், நாற்பது நிமிடங்களில் மிக வேகமாக எழுதப்பட்ட காரணத்தினாலும், நானும் நான் கூறுபவற்றை மிக வேகமாக எழுதிக்கொள்ளும் எழுத்துனருமாக இருவருமே நோய்வாய்ப்பட்டிருந்தமையினாலும் இதனுள் நிச்சயமாக ஒழுங்கமைப்பின்மையும் குறைகளும் ஏற்பட்டிருக்கும். எனவே மன்னிப்போடு பொருந்திக்கொள்ளுமாறு எனது சகோதரர்களைக் கேட்டுக் கொள்கிறேன். உங்களுக்குப் பொருத்தமாகப் பட்டால் திருத்தம் செய்ய அனுமதி இருக்கின்றது.